# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590

**ஆணை நாள் 03.11.2020**

**முன்னிலை**

**திரு.ச.செல்வராஜ்,எம்.ஏ.,பி.எட்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 184/E/2019**

| | | |
|---|---|---|
| திரு.S.சந்திரசேகர் | .. | மேல்முறையீட்டாளர் |

*/எதிர்/*

| | | |
|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். | .. | பொது அதிகார அமைப்பு |

******

**ஆணை**

மேல்முறையீட்டாளர் 23.10.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் அருப்புக்கோட்டை கோட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், விருதுநகர் வட்டம், வி.முத்துலிங்கபுரம் கிராமம், கோவிந்தநல்லூர் கண்மாய் சிறிய நீர்பாச திட்டத்திற்கு நில எடுப்பு செய்யப்பட்ட புல எண்.அசைன்மெண்ட் வழங்கி ரத்து செய்யப்பட்ட புல எண் எவை, அதற்கான நகல், கோவிந்தநல்லூர் கண்மாய்க்கு நிலம் கொடுத்தவர்கள் நீதிமன்றம் மூலம் யார்யார் வழக்கு தொடர்ந்தனர், அவர்களுடைய பெயர், முகவரி, வழக்கு எண் மற்றும் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் நகல் ஆகியவற்றை 2 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 08.11.2018 தேதியிட்ட கடிதத்தில் தகவல் வழங்க மறுத்துள்ளதாக தெரிவித்து, மேல்முறையீட்டாளர் 28.11.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான மனுவை முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கும் மற்றும் 04.01.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திலும் தாக்கல் செய்துள்ளார்.

2. அந்த மனு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வரப்பெற்ற தேதியின் அடிப்படையில் காலவரிசை பட்டியலிடப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விருதுநகர் மாவட்டத்தில் பல மாதங்கள் ஆகியும் முழுமையான தகவல் வழங்கப்படாத மேல்முறையீட்டாளர்களின் நிலுவை மனுக்களின் மீது மாநில தகவல் ஆணையர் அவர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) மற்றும் பொதுத் தகவல் அலுவலர்களுடன் 29.09.2020 அன்று காணொலி காட்சி மூலம் விவாதிக்கப்பட இருந்த நிலையில், அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் 23.09.2020 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மேல்முறையீட்டாளர் 17.09.2020 அன்று அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி, அவர் கோரிய தகவல்கள் தொடர்பான ஆவணங்களை பார்வையிட்டு, தகவல்களை கட்டணமின்றி பெற்றுக் கொண்டு ஏற்பளிப்பு செய்துள்ளதாக தெரிவித்து, மேல்முறையீட்டாளரின் 17.09.2020 தேதியிட்ட ஏற்பளிப்பு கடிதத்தின் நகலை இணைத்து அனுப்பி வைத்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-.ச.செல்வராஜ்,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 184E/2019</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின்
நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.

திரு.S.சந்திரசேகர் த/பெ.இ.சுப்புக்காளை,
கோவிந்தநல்லூர், முதலிப்பட்டி அஞ்சல்,
சிவகாசி வழி, விருதுநகர் வட்டம் & மாவட்டம்.

Copy to: File

RJ/PS 06.11.2020